வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   29.07.2024 திங்கட்கிழமை   இதழ் : 211   பக்கங்கள் : 12

## ரணிலுக்கு ஆதரவளிப்பதா? வேட்பாளரை நிறுத்துவதா?

# கட்சித் தீர்மானமே என்னுடைய முடிவு!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

"எங்கள் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கச் சொன்னால் மகிழ்ச்சியுடன் ஆதரிப்போம். அவருக்கு எதிராக வேறு யாரையாவது நிறுத்துவோம் என்றால் அதற்கும் சம்மதிப்போம்" - என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை சிறீ லங்கா பொதுஜன (இன்று) திங்கட்கிழமை முடிவு செய்வோம் என்றும் அவர் கூறினார்.

நேற்றைய தினம் கட்சி பணிமனையில் நடந்த சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களை மகிந்த ராஜபக்ஷ சந்தித்து கேள்விகளுக்கு பதிலளித்தார். அந்தக் கேள்வி - பதில்கள்

11

## பண்ணையில் 'றேஸ்' ஓடிய குழு கைது!

- பா.பிரசன்னா -

யாழ்ப்பாணம் நகரின் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட குழு ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், மது போதையில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியவர்களும் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நகரின் பண்ணை பகுதியில் வார இறுதிநாட்களில் பொழுது போக்குக்காக ஏராளமானவர்கள் கூடுகின்றனர். இவ்வாறு கூடுபவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இளைஞர் குழுக்கள் மோட்டார்சைக்கிள் பந்தயத்தில்

11

## பெரமுன வேட்பாளர் தம்மிக பெரேராவே?

கொழும்பு, ஜூலை 29

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தொழிலதிபரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக பெரேராவுக்கு ஆதரவு வழங்க சிறீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ இந்தத் தீர்மானத்தை எடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், நேற்றைய தினம் பெரமுனவின் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதில், மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் வரிசையில் தம்மிக பெரேராவும் அமர்ந்திருந்தார். இது கட்சிக்

11

## சுதந்திரமான தேர்தலுக்கு சகலரும் ஒத்துழையுங்கள்!

### தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 29

தேர்தல் காலத்தில் அரச ஊழியர்கள் செயல்பட வேண்டிய முறைமை குறித்து விசேட சுற்றறிக்கை இரு நாட்களுக்குள் வெளியிடப்படும். சுதந்திரமாகவும் நியாயமாகவும் தேர்தலை நடத்துவதற்கு அரச சேவையாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் பணிகள் குறித்து வினவியபோதே

11

## 17 வயதுக்குள் பாடசாலை கல்வி நிறைவுறுத்தப்படும்


கொழும்பு, ஜூலை 29

மாணவர்கள் 17 வயதுக்குள் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்வதற்கு வசதியாக கல்வி சீர்திருத்தம் செய்யப்படவுள்ளது. இந்த நடைமுறை 2025ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரவுள்ளது. இதனால், பாடசாலைகளிலுள்ள தரங்கள் 13இலிருந்து 12ஆகக் குறைக்கப்படும்.

- இவ்வாறு கல்வி சீர்திருத்தக் குழு முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

அத்துடன், தகவல் தொழில்நுட்பம் பாடத்தை கட்டாய பாடமாக்கவும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு குறிப்பிட்ட சதவீத புள்ளிகளை

11




## ரி-20 ஆசிய கிண்ணம் இலங்கை வசமானது!

தம்புள்ளை, ஜூலை 29

ஆசியக் கிண்ண ரி -20 தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய மகளிர் அணியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டு சம்பியனானது இலங்கை மகளிர் அணி. இதன் மூலம் ஆசியக் கிண்ணத்தை முதன்முறை யாக கைகளில் ஏந்தியது இலங்கை மகளிர் அணி.

2024ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடந்தது. இதன் இறுதிப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளையில் நடைபெற்றது.

11

## பொலிஸ் மா அதிபர் விவகாரம் இந்த வாரத்தில் தீர்வு அவசியம்!

### சபாநாயகர் - பிரதம நீதியரசரை பேசுமாறு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஜூலை 29

பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பான பிரச்னைகளுக்கு சபாநாயகரும் பிரதம நீதியரசரும் கலந்துரையாடி தீர்வுகாண வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் என்பது மக்களின் இறையாண்மையின் ஓர் அங்கம். அதனை மீற இடமளிக்க முடியாது. அரசமைப்பின் 106ஆவது சரத்தின் பிரகாரம் நாட்டில் சுதந்திரமான - நியாயமான தேர்தலை நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதாக சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அதற்கு பூரண ஆதரவை வழங்குவது அனைவரினதும் பூரண கடமை என்றும் கூறினார்.

11

## தமிழ் பொது வேட்பாளர் யார்? தெரிவதற்கான குழு அமைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 29

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் யார்? தேர்தல் விஞ்ஞாபனம், போட்டியிடும் கட்சிச் சின்னம் என்பவை தொடர்பில் தீர்மானிக்கவும் நிதி மற்றும் பிரசார நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகளை எடுக்கவும் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு உப கட்டமைப்புகளை நிறுவியுள்ளது.

தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து உருவாக்கிய தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு நேற்று

11

## உரிமம் பெறாமல் கைபேசிகளை விற்றால் ரூ. 10 இலட்சம் தண்டம்!

கொழும்பு, ஜூலை 29

உரிமம் பெறாமல் கைபேசிகளை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு 10 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்க தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

திருத்தப்பட்ட தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை சட்டத்தின் மூலம் அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைபேசி விற்பனை நிலையங்கள் பதிவு

11

## 61 இலங்கைத் தமிழர்களுக்கு புகலிடம் வழங்க கோரிக்கை!

### பிரிட்டன் வெளியுறவு செயலர் உள்துறை செயலரை கோரினார்

லண்டன், ஜூலை 29

பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ள டியாகோ கார்சியா தீவில் 2021ஆம் ஆண்டு முதல் சிக்கித் தவிக்கும் 61 இலங்கை தமிழர்களுக்கும் புகலிடம் வழங்குமாறு பிரித்தானிய வெளியுறவு செயலர் டேவிட் லாம்மி, உள்துறை செயலர் யெவெட்டர் கூப்பரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து உள்துறை செயலாளருக்கு லாம்மி அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

டியாகோ கார்சியாவில் தடுத்து வைக்கப்பட்டவர் களில் சிலர் அண்மைய வாரங்களில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஐ. நா.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இது மூன்றாம் வகுப்பு படிக்கும்போது கேள்விப்பட்ட துணுக்குத்தான். இருந்தாலும் தெரியாதவர்களுக்காக தருகின்றேன்.

காட்டில் வாழும் மிருகங்களுக்கெல்லாம் தான்தான் ராஜா என்று நினைத்துக்கொண்டிருந்த சிங்கம் ஒருநாள், தன் எதிரே வந்த மிருகங்களிடமெல்லாம் "இந்தக் காட்டுக்கு யார் ராஜா?" என்று கேட்டுக்கொண்டே வந்தது. எதிரே வந்த விலங்குகளும் எதற்கு வம்பை என்று, "நீங்கதான்" என்று சொல்லிக்கொண்டே போயின.

எதிரே வந்த யானை ஒன்றை மறித்த சிங்கம் அதேகேள்வியைக் கேட்டது. என்ன பிரச்னையில் வந்ததோ தெரியவில்லை, யானை தனது தும்பிக்கையால் சிங்கத்தை தூக்கி வீசி விட்டுச் சென்றது. தூரத்தே விழுந்த சிங்கம் தன்னை சுதாகரித்துக்கொண்டு எழும்பி, பக்கத்தில் நின்ற நரியிடம் சொன்னது:

"விசர் யானை தெரியா விட்டால் தெரியாது என்று சொல்லவேண்டியதுதானே" என்று.

நேற்று வெளியான "ஈழநாடு" பத்திரிகையில் நமது மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய கட்டுரையை படித்துக் கொண்டிருந்தபோது ஒரு விடயத்தை அவர் வேதனையுடன் சுட்டிக்காட்டியதை அவதானிக்க முடிந்தது.

தமிழகத்தின் மூத்த இடதுசாரி தலைவர் ஒருவர் தன்னோடு பேசிய போது, தான் 1983 கறுப்பு ஜூலை பற்றி குறிப்பிட்டதை இடைமறித்த அவர், 1983 ஜூலையில் என்ன நடந்தது என்று கேட்டார் என்று எழுதியிருந்தார்.

ஈழத்தமிழர் விவகாரத்தில் அக்கறையுள்ள ஓர் இடதுசாரி தலைவருக்கே கறுப்பு ஜூலை பற்றி தெரிந்திருக்கவில்லை என்ற கவலையை தனபாலசிங்கம் தனது கட்டுரையில் பிரஸ்தாபித்திருந்தார்.

ஈழத்து அரசியல் பற்றி தமிழகத்தில் அரசியல்வாதிகள் எவ்வாறு புரிந்து வைத்திருக்கின்றனர் என்பதை அவர் வேதனையுடன் எழுதிய அதேதினம் பி. பி. சி. தமிழ் இணையத்தளத்தில் வெளியான கட்டுரை ஒன்றில், ஈழத்தமிழர் அரசியல் பற்றி தெற்கில் சில தமிழ் அரசியல்வாதிகள் எவ்வாறு புரிந்து வைத்திருக்கின்றனர் என்பதையும் அறிய முடிந்தது.

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக பேசப்படுகின்ற விடயம், வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பானது என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்.

அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிடுவது என்பது அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதி ஆவதற்காக இல்லை என்பது "பச்சைக் குழந்தைக்கும்" தெரிந்ததுதான்.

யுத்தம் முடிவுற்ற பின்னர் நடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் ஏதாவது ஒரு வேட்பாளருக்கு வாக்களித்து எதையும் காணாத தமிழ் மக்கள் இந்தத் தேர்தலிலாவது தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக இதனை பயன்படுத்த நினைப்பது பற்றி பல்வேறு விளக்கங்களை எற்கனவே சொல்லிவிட்டனர்.

இது தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து ஒரு வாக்கெடுப்பாக இதனை எதிர்கொள்ளவில்லை என்றும் இந்த நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்னைக்கு இன்னமும் ஒரு தீர்வு காணப்படவில்லை என்பதையும் முக்கியமாக இன்று நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு மாத்திரமல்ல, இனப்பிரச்னைக்கும் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, அதாவது தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக ஒற்றுமையாக இப்போதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் அழுத்தமாக சொல்வதற்கே இந்தத் தேர்தலை பயன்படுத்த நினைக்கின்றார்கள் என்பதையும் தெளிவாக சொல்லிக் கொண்டே, இந்த தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்கும் தரப்பினர் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், பி. பி. சி. தமிழ் கட்டுரையில், கருத்துச் சொன்ன தெற்கின் தமிழ் அரசியல் தலைவர்களோ, தமிழ் வேட்பாளர் வெற்றிபெற்று ஜனாதிபதி ஆகமுடியுமா? என்று கேள்வி எழுப்பியிருக்கின்றனர். அவர்கள் தெற்கில் மட்டுமல்ல, வடக்கு, கிழக்கிலும் இடைக்கிடையே அரசியல் செய்ய எத்தனிப்பவர்கள் என்பதும் கவனிக்கவேண்டியது.

அவர்கள்தான் இப்படி என்றால், அதற்கு தலைப்பிட்ட பி. பி. சி. தமிழ் ஆசிரியரும் தமிழர் ஒருவர் ஜனாதிபதி ஆவது எவ்வளவு சாத்தியம்? என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அந்தக் கட்டுரையிலேயே தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பான தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் ஏழு தமிழ் தேசியக் கட்சிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் முதலிலேயே இப்படி தெளிவாக சொல்லப் பட்டிருக்கின்றது:

"தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு" எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் அரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து, தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக கையாளும் வகையில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதெனத் தீர்மானித்துள்ளது."

அதாவது, அதனை "ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தல் என்பதை நிராகரித்து...", என்று தெளிவாக சொன்ன பின்னரும், தமிழர் வெற்றிபெறமுடியுமா என்று கேள்வி கேட்பதை எப்படி புரிந்துகொள்வது?

தெரியாவிட்டால் தெரியாது என்று சொல்ல வேண்டியதுதானே என்று சிங்கம் கேட்டதுதான் நினைவுக்கு வந்தது.!

**- ஊர்க்குருவி.**

# வனவள திணைக்கள தளங்களுக்கு சுற்றுலா வருவோர் தொகை உயர்வு!

### அமைச்சர் பவித்ரா



கொழும்பு, ஜூலை 29

கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டில், வன வளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தளங்களுக்கு வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது - வனஜீவ ராசிகள், வன வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2024இல், வனவளத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சுற்றுலா தலங்களுக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி, 2022ஆம் ஆண்டு வன வளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 89 ஆயிரத்து 405 ஆகவும், 2023ஆம் ஆண்டில் 4 இலட்சத்து 44 ஆயிரத்து 53 ஆகவும் பதிவாகியுள்ளது. 2024ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் சுமார் 3 இலட்சத்து 64 ஆயிரத்து 521 சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர்.

இவற்றில், 2022 ஆம் ஆண்டில் அந்த இடங்களுக்குச் சென்ற மொத்த சுற்றுலா பயணிகளில் 19.8 வீதமும் 2023 ஆம் ஆண்டில், 27.8 வீதமும் 2024 இல் 40 வீதமும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளாவர் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தீவக கல்வி பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஜூலை 29

தீவக வலயத்தில் கல்வித் துறையில் காணப்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காணவும் - கல்வி தரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

தீவகம் கல்வி வலயத்தின் பாடசாலைகளில் பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன. ஆளணி பற்றாக்குறை, நிர்வாக சிக்கல்களும் உள்ளன. இவை உட்பட பல விடயங்கள் மாணவர்களின் கல்வித் தரத்தில் தாக்கம் செலுத்துகின்றன. இவை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அவரின் பணிமனையில் நேற்று இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

தீவகத்தின் கல்வித் துறையை வளர்ச்சிப்படுத்தவும் இது தொடர்பில் துறைசார் அதிகாரிகளின் ஆலோசனைகளை பெறவும் கூட்டத்தில் பேசப்பட்டன. (ஐ)

# பிள்ளையை பார்க்க சென்ற தந்தை விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 29

மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் தனது பிள்ளையை பார்ப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தை விபத்தில் உயிரிழந்தார்.

களுத்துறை - மக்கொனை அக்கரமலை பிரதேசத்தை சேர்ந்த 25 வயதான இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

பேருந்தை கடந்து சென்றபோது எதிரே வந்த லொறி மோதியதில் அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மகளிர் கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து!

கொழும்பு, ஜூலை 29

ஆசிய கிண்ணத்தை வென்ற சமரி அத்தபத்து உள்ளிட்ட இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்தார்.

"உங்களுடைய தோல்வியற்ற பயணத்துக்கு உங்கள் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் கூட்டு செயல்பாடு சான்றாக அமைகிறது. நீங்கள் எமது நாட்டை கௌரவப்படுத்தி யுள்ளீர்கள்", என்று ஜனாதிபதி தனது வாழ்த்தில் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# கறுப்பு ஜூலை நினைவேந்தல் உணர்வுபூர்வமாக கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கறுப்பு ஜூலையின் 41 ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயசேகரம் தலைமையில் தந்தை செல்வா அரங்கில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

ஜூலை கலவரத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான பொதுச் சுடர் சர்வமதத் தலைவர்களால் ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வணிகர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



படங்கள் - ஐ. சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
29.07.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆடி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சஜித் பிரேமதாஸ எங்கிருந்தார்?

அரசாங்கத்தின் கொள்கை ஓர் இனத்தை ஓரங்கட்டுவதாகவே இருந்தது என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார். கோவிட் தொற்றுக் காலத்தில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் பேசுகின்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மக்களை இரண்டாந்தர பிரஜைகளாகவே கையாண்டு வந்திருக்கின்றன. இதன் விளைவாகவே உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றது. இதன் விளைவாகவே நாடு வங்குரோத்து நிலைக்குள் சிக்கியிருக்கின்றது. ஆனால் சஜித் பிரேமதாஸவோ, சிறு குழந்தைகள் போன்று பேசியிருக்கின்றார்.

சுதந்திரம் அடைந்ததாக சொல்லப்படும் காலத்திலிருந்து இன ஒதுக்கலும் - இன ஒடுக்குமுறையும்தான் இலங்கையின் உள்நாட்டு கொள்கையாக இருந்தன. இதன் விளைவாக இடம்பெற்ற தமிழ் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்துவிட்டதாகக் கூறப்படும் கடந்த பதினைந்து வருடங்களில்கூட தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை சார்ந்து ஆகக் குறைந்த நிலையில்கூட தென்னிலங்கை எந்தவொரு முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை.

கடந்த பதினைந்து வருடங்களில் அதிகார அரசியலை தன்வசப்படுத்தும் போட்டி அரசியலுக்கு தன்னை தயார் செய்து கொண்டிருந்தவர்தான் சஜித் பிரேமதாஸ. இந்தக் காலத்தில், தமிழ் மக்கள்மீதான ஒடுக்குமுறைகள் - இறுதி யுத்தத்தின்போது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல் தொடர்பில் சஜித் முன்னேற்றகரமான கொள்கை நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், அரசாங்கத்தின் கொள்கையென்று ஒரு சொல்லில் அனைத்தையும் ராஜபக்ஷக்கள்மீது சுமத்திவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு வெள்ளையடிக்க முற்படுவதானது அடிப்படையிலேயே தவறானது. தவிர, இலங்கை அரச கொள்கையை ஒரு சிலரின் கொள்கையாக காண்பிக்க முற்படும் முயற்சியாகும்.

அடுத்து கதிரையில் அமரப் போவது யார் என்னும் போட்டியில் தனக்கான வாய்ப்பை உச்சமாக எண்ணிக் கொண்டிருக்கும் சஜித் பிரேமதாஸ எண்ணிக்கையில் குறைவான இன சமூகங்களின் வாக்குகளை இலக்கு வைத்து செயல்பட்டு வருகின்றார் - முக்கியமாக தமிழ்த் தேசிய இனத்தின் வாக்குகள் தனக்கே கிடைக்குமென்று அவர் நம்புகின்றார்போலும். இந்த அடிப்படையில்தான், அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறிவருகின்றார்.

இதன் மூலம் தமிழ் மக்களை திருப்திப்படுத்த முடியுமென்று அவர் நம்புகின்றார்போலும். ஆனால், பொலிஸ் அதிகாரம் அடங்கலான 13 தொடர்பில் அவர் உறுதியாக பேசுவதாகத் தெரியவில்லை. இதேவேளை, அவரின் தகப்பனாரால் பறித்தெடுக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள விடயங்கள் அனைத்தையும் மீளவும் 13இன் கீழ் கொண்டு வருவேன் என்பதையும் அவர் கூறவில்லை. மிகவும் கவனமாகவே சொற்களை பயன்படுத்தி வருகின்றார். ஆனால், தனது வாய்மூல வாக்குறுதிகளை நம்பி தமிழ் மக்கள் வழமைபோல் வாக்களிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்.

இலங்கையின் பேரினவாத அரசியல் கொள்கையில் இதுவரையில் எந்தவொரு முற்போக்கான மாற்றங்களும் ஏற்படவில்லை. முன்னரைப்போல் அனைத்தும் அப்படியே இருக்கின்றன. இந்த பேரினவாதக் கொள்கையை அரசியல் மயப்படுத்தி - சிங்கள மக்களை தமிழ் விரோத அரசியலின் அடிமைகளாக மாற்றியதில் 1948இற்கு பின்னர் இலங்கைத் தீவை ஆட்சிசெய்த அனைத்து அரசாங்கங்களுக்கும் பங்கு உண்டு. இந்தப் பங்கில் ஒன்றை விடவும் இன்னொன்று சிறந்தது என்று கூறுவதற்கு எதுவுமில்லை. இதில் சஜித் பிரேமதாஸவுக்கும் ஏனைய தென்னிலங்கை வேட்பாளர்களுக்கும் பெரியளவிலான வேறுபாடுகள் இல்லை. இதனை வெளிப்படையாகப் பேசும் அரசியல் துணிவில்லாவிட்டால், அமைதியாக இருப்பதே மேலானது.

# பாடசாலைக்கு கஞ்சாவுடன் சென்ற மாணவன் சிக்கினார்!

முல்லைத்தீவு, ஜூலை 29

மாணவன் ஒருவன் பாடசாலைக்கு கஞ்சா பொதியை கொண்டு சென்ற சம்பவம் ஒன்று முல்லைத்தீவில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு - கள்ளப்பாட்டில் உள்ள ஒரு பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தரம் 8இல் கல்வி கற்கும் மாணவன் கஞ்சா பொதியை தனது புத்தக பைக்குள் வைத்து பாடசாலைக்கு கொண்டு சென்றுள்ளார். இதனை அவதானித்த சக மாணவன் பாடசாலை அதிபரிடம் விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, மாணவன் மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டார். அத்துடன், பொலிஸாருக்கும் விடயம் தெரியப்படுத்தப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# திருமலைக்கு மாடுகளை கடத்திய மூவர் கைது!

நெடுங்கேணி, ஜூலை 29

நெடுங்கேணிலிருந்து திருகோணமலைக்கு 15 மாடுகளை கடத்திச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாடுகள் கடத்தப்படுவது தொடர்பில் விசேட அதிரடி படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

ஹொரவப்பொத்தானை 6ஆம் கட்டை பகுதியில் வைத்து பொலிஸார் வாகனத்தை மறித்து சோதனையிட்டனர். இதன்போது, 15 மாடுகளை மீட்டதுடன், 3 பேரையும் கைது செய்தனர்.

கைதான நபர்களும் மீட்கப்பட்ட மாடுகளும் வவுனியா பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். இன்றைய தினம் சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். (ஐ)

# நாங்கள் செய்த தவறுக்காக எம்மை மன்னிக்க வேண்டும்!

## வவுனியாவில் சுமந்திரன் எம். பி.

வவுனியா, ஜூலை 29

மருத்துவர் சத்தியலிங்கத்துக்கும் வேறு இரண்டு அமைச்சர்களுக்கும் அநீதி இழைக்கப்படுகின்றபோது ஓர் அரசியல் கட்சியாக - அந்தக் கட்சியிலே முக்கிய பதவி வகித்தவன் என்ற வகையில் அதற்கு எதிராக குரல் கொடுக்காததில் எனக்கும் பெரும்பங்கு உண்டு. இதற்காக வவுனியா மக்கள் மன்னித்தருள வேண்டும் - இவ்வாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கத்தின் கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஒருவரை பெரியவர் - நல்லவர் - வல்லவர் என தலையிலே தூக்கிக் கொண்டு வந்து வடக்கு மாகாண மக்களுக்கு அறிமுகம் செய்ததில் எனக்கு ஒரு பங்கு இருக்கிறது. அது நான் செய்த முதலாவது தவறு. அடுத்து மருத்துவர் சத்தியலிங்கத்துக்கும் வேறு இரண்டு அமைச்சர்களுக்கும் ஓர் அநீதி இழைக்கப்படுகின்றபோது ஓர் அரசியல் கட்சியாக - அந்தக் கட்சியிலே முக்கிய பதவி வகித்தவன் என்ற வகையில் அதற்கு எதிராக குரல் கொடுக்கவோ - அதை அந்த வேளையிலேயே திருத்தி அமைக்கவோ நாங்கள் எதுவும் செய்ய வில்லை. இந்தத் தவறில் எனக்கும் பெரும்பங்கு உண்டு.

வவுனியாவின் மகனுக்கு ஒரு கௌரவிப்பு நிகழ்வை செய்கின்றபோது நாங்கள் இந்த தவறுகளை ஒத்துக் கொள்கின்றோம். அது நாங்கள் செய்த தவறு. அதனை நீங்கள் பொறுத்து மன்னித்து அருள வேண்டும் - என்றார். (ஐ)

# ஒரு நாளில் விபத்தில் 4 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 29

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வரையான 24 மணி நேரத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர்.

காலியின் ரத்கம உடகம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததில் சுவருடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார். இதில், 51 வயது நபரே உயிரிழந்தார்.

பொலநறுவை - கல்கொரிய சந்தியில் கல்குவாரி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் விழுந்ததில் 68 வயது நபர் ஒருவர் உயிரிழந்தார்.

கம்பஹா - மாலம்பே - ஹோகந்தர வீதியில் ஹோகந்தர பிரதேசத்தில் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி பயணித்த ஓட்டோ மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இதேபோன்று, கம்பஹா ஜா-எல - மினுவாங்கொடை வீதியில் வான் ஒன்று மோட்டார் சைக்கிளை மோதியதில் 47 வயது நபர் ஒருவர் உயிரிழந்தார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். நீங்கள் எதை பேசினாலும் அதை எல்லோரும் தவறாக புரிந்து கொள்வார்கள்.

**இடபம்**

கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும்.

**மிதுனம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**கடகம்**

தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**சிம்மம்**

கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக்கொண்டிருக்க வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**துலாம்**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும்.

**விருட்சிகம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களால் ஆதாயமுண்டு. அமோகமானநாள்.

**தனுசு**

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**மகரம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புது வேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும்.

**கும்பம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த - பந்தங்கள் தேடி வருவார்கள். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தோற்றப் பொலிவு கூடும். கை மாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

# நிதி ஆயோக் குழுக்கூட்டத்தை தமிழகம் புறக்கணித்தது ஏன்?

## முதல்வர் ஸ்டாலின் விளக்கம்

சென்னை, ஜூலை 29

மத்திய பா. ஜ. க. அரசு, அரசியல் நோக்கத்துடன் அரசை நடத்துவதால், 'நிதி ஆயோக்' குழுக்கூட்டத்தை புறக்கணித்து மக்கள் மன்றத்தில் பேச வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்' என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார். இது தொடர்பில் சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்ட வீடியோ பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான 'நிதி ஆயோக்' கூட்டத்தில் பங்கெடுத்திருக்க வேண்டிய நான், மத்திய பா. ஜ. க. அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்ட நிதி நிலை அறிக்கையால், நீதி கேட்டு, மக்கள் மன்றமான உங்கள் முன் பேச வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

மத்திய பா. ஜ. க. அரசு, தொடர்ச்சியாக தமிழகத்தை புறக்கணித்து வருகிறது.

இது தமிழகத்தை பழிவாங்கும் பட்ஜெட் மட்டுமல்ல, ஒட்டு மொத்த இந்திய நாட்டு மக்களையே பழிவாங்கும் பட்ஜெட். சுயநலத்துக்காக, நாற்காலியை காப்பாற்றிக் கொள்ள போட்டுக்கொண்ட பட்ஜெட் இது. மத்திய அரசுக்குத் தமிழக மக்களின் குரலாக, ஏன், இந்திய நாட்டு மக்களின் குரலாக ஒன்றை சொல்கிறேன்.

மேலும் மேலும் தவறு செய்கிறீர்கள். மேலும் மேலும் தோல்விகளைச் சந்திப்பீர்கள் - இவ்வாறு ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். (எ)

# தமிழகம் எந்த விதத்திலும் புறக்கணிக்கப்படவில்லை

## சொல்கிறார் அண்ணாமலை



கோவை, ஜூலை 29

தமிழகம் எந்த விதத்திலும் புறக்கணிக்கப்படவில்லை. கடந்த ஆண்டுகளை விட அதிகளவு திட்டங்கள் தமிழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன என்பது தான் உண்மை என்று தமிழக பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

கோவையில் மத்திய பட்ஜெட் தொடர்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழக அரசு மத்திய அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவதில்லை. மத்திய அரசு மீது தொடர்ந்து பழி சுமத்தி வருகிறது. மதுரையில் அமையவுள்ள எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமான பணிகளில் ஒரு மரத்தை அகற்றுவதற்கு தமிழக அரசு 8 மாத காலம் இழுத்தடித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாநில அரசு இந்த அளவுக்கு பொறுப்பற்று செயல்பட்டால் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படும். இதனால், வளர்ச்சிப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படும். மத்திய பட்ஜெட்டில் மாநிலங்களுக்கான முக்கியத்துவம் அல்லது நிதி உரிய வகையில் ஒதுக்கப்படவில்லை எனக் கூறுவது அரசியல் சார்ந்த கருத்தாகும். பட்ஜெட் பணிகளை மேற்கொள்ளும் மத்தியிலும் மாநிலத்திலும் உள்ள நிதிச் செயலாளர்கள் கலந்து ஆலோசித்து தான் நிதி பங்கீடுகளை மேற்கொள்கின்றனர். அவர்களிடத்தில் எந்த குழப்பமும் இல்லை - என்றார். (எ)

# தி. மு. க. ஒரு தனியார் கம்பனி ஸ்டாலின்தான் முகாமையாளர்

## செல்லூர் ராஜூ விமர்சனம்



மதுரை, ஜூலை 29

தி. மு. க. மக்களுக்காக செயல்படும் அரசியல் கட்சி அல்ல; அது ஒரு தனியார் கம்பனி. அதன் முகாமையாளராக இப்போது மு. க. ஸ்டாலின் இருக்கிறார். அவருக்குப் பின்னால் உதயநிதியும் இன்பநிதியும் முகாமையாளர்களாக வருவார்கள் என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ விமர்சித்துள்ளார்.

மதுரையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்களை ஏமாற்றவே மத்திய அரசு தாக்கல் செய்த வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக தி. மு. க. போராட்டம் நடத்துகிறது. தி. மு. க. சுயநலத்துடன் செயல்பட்டு வருகிறது. மக்கள் நலனை பற்றிச் சிந்திக்காத தி. மு. க. குடும்ப நலனை மட்டுமே பார்க்கிறது - என்றார். (எ)

# சாதி, மத, பிரதேச அடிப்படையில் மக்களை பிளவுபடுத்தும் தி. மு. க.

## பிரதி அமைச்சர் ஜிதேந்திர சிங் சாடல்

சென்னை, ஜூலை 29

சாதி, மதம், பிரதேசம் அடிப்படையில் தி. மு. க. மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதாக மத்திய பிரதி அமைச்சர் ஜிதேந்திர சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சென்னையில் தமிழக பா. ஜ. கவின் சிந்தனையாளர்கள் பிரிவு சார்பில் 2024ஆம் ஆண்டின் மத்திய பட்ஜெட் குறித்த நிகழ்ச்சியில் மத்திய அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை பிரதி அமைச்சர் ஜிதேந்திர சிங் உரை யாற்றினார். அப்போது அவர், வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தி. மு. க. போராட்டம் நடத்தியிருக்கிறது. உண்மையில், தி. மு. க. அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்டதை விட பல மடங்கு அதிக நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய பட்ஜெட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்க திமுகவுக்கு எந்த தகுதியும் இல்லை. ஆழ்கடல் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியை தமிழ்நாடு அரசு பயன்படுத்த வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளர்களுடன் சமஷ்டி குறித்து பேசத் தயார்!

## தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

**தமிழ் மக்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு குறித்து பேச்சுகளை முன்னெடுக்க ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேசுவதற்கு தாம் தயாராக இருக்கின்றனர் என்று தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.**

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்தாலும் பிரதான வேட்பாளர்களுடன் பேச்சு நடத்தத் தயாராக உள்ளீர்களா என்று தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களை கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

**சித்தார்த்தன்**

"ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, அவர்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யக்கூடியவாறான சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வழங்குவதற்கு முன்வருவார்களாயின், அவர்களுடன் பேச்சு நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம். பி. தெரிவித்தார்.

அத்துடன், இதன் முதற்கட்டமாக மாகாண சபை முறைமை உள்ளடங்கலாக அரசிமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

**செல்வம் அடைக்கலநாதன்**

இதேவேளை, கடந்தகாலங்களில் தொடர்ந்து பேச்சுகளை நடத்தி, அதில் எவ்வித பயனும் கிட்டாததாலேயே தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்குவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ரெலோவின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் எம். பி. தெரிவித்தார்.

"தமிழ் மக்களுக்கான சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்து பேசுவதற்கு வேட்பாளர்கள் முன்வருவார்கள் எனில், நாம் அதற்கு இடமளிப்போம். இருப்பினும், இந்தப் பேச்சுகள் வெறுமனே வாய்வழி வழங்கப்படும் உத்தரவாதங்களாக மாத்திரம் இருக்கக்கூடாது. மாறாக முன்மொழியும் தீர்வு எழுத்துமூல உடன்படிக்கையாக அமையவேண்டும்" - என்றும் அவர் கூறினார்.

**விக்னேஸ்வரன்**

இதுகுறித்துத் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், "ஜனாதிபதி வேட்பாளர்கள் எம்முடன் பேசுவதாக இருந்தால், எப்படியும் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தே பேசுவார்கள். இருப்பினும் 13ஆவது திருத்தத்தால் எவ்வித பயனுமில்லை" எனக் கூறினார்.

ஆனால், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று, சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்குவது குறித்து அவர்கள் பேசத் தயாராக இருந்தால் தாம் பேச்சுக்கு செல்வோம். இல்லையேல், தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்குவதை முன்னிறுத்தி நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

**சிறீதரன்**

பொது வேட்பாளரை ஆதரிக்கும் உடன்படிக்கையில் கையொப்பமிடாதபோதிலும் தனது ஆதரவை வெளிப்படையாக அறிவித்துள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சி. சிறீதரன் தெரிவிக்கையில்,

"இணைந்த வட, கிழக்கில் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வழங்க முன்வரும் வேட்பாளர்களுடன் பேசத்தயார்", என்றார்.



# அறிவகம் சனசமூக நிலைய குருதிக்கொடை முகாம்!

வடமராட்சி, ஜூலை29

பருத்தித்துறை - புலோலி வடமேற்கு முருகன் கோவிலடி அறிவகம் சனசமூக நிலையத்தின் 69ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்த தான முகாம் நடைபெற்றது.

சனசமூக நிலையத்தின் தலைவர் பி. சரணிகன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த இந்தக் குருதிக்கொடை முகாமில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். இதில், பெருமளவான இளைஞர்கள் குருதி தானம் வழங்கினர்.

இதேநேரம், அறிவகம் சனசமூக நிலையத்தால் எதிர்வரும் ஒகஸ்ட் 4ஆம் திகதி மரதன் ஓட்டம், கயிறிழுத்தல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த சனசமூக நிலையத்தால் கால்நடைகளுக்கு தண்ணீர் வழங்கும் நாளாந்த செயல்பாடும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# வடக்கில் 97 சதவீதமான கண்ணிவெடிகள் அகற்றம்!

## ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29



வடக்கு மாகாணத்தில் 97வீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், சில பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவை வெற்றிகரமாக அகற்றப்படும்.

அத்துடன், குடிதண்ணீர் பிரச்னைகளுக்கு தீர்வாக போதியளவு விநியோகத்தை வழங்குவதற்காக அரசாங்கம் 5 குடிதண்ணீர் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 2 திட்டங்கள் அடுத்த வருடத்துக்குள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# 64 இந்திய மீனவர்களின் வழக்கு நாளை விசாரணைக்கு வருகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 64இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு நாளை செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது.

இவர்கள், இலங்கை கடல் பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தில் கைதாகியிருந்தனர். கடந்த ஜூலை 1ஆம் திகதி 4 படகுகளுடன் கைதான 25 மீனவர்கள், ஜூலை 11ஆம் திகதி 3 படகுகளுடன் கைதான 13 மீனவர்கள், ஜூன் 16ஆம் திகதி ஒரு படகுடன் கைதான 4 மீனவர்கள், கடந்த ஜூலை 22ஆம் திகதி கைதான 22 மீனவர்கள் தொடர்பான வழக்குகளே நாளை விசாரணைக்கு வருகின்றன.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தற்போது 74 இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாகனத்தை தீ வைத்து எரித்தது வன்முறை குழு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வீட்டின் முன்பாக நிறுத்தி வைத்திருந்த வாகனம் வன்முறை கும்பல் ஒன்றால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

மூர் வீதியில் வசிக்கும் நபர் ஒருவர் தனது வாகனத்தை வீட்டின் முன் நிறுத்தி வைத்துள்ளார். நேற்று முன்தினம் நள்ளிரவை அண்மித்த நேரத்தில் அங்கு வந்த வன்முறை குழு வாகனத்துக்கு தீ வைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரால், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# கஞ்சா கடத்திய டிப்பர் சாரதி கைது!

தென்மராட்சி, ஜூலை 29


20 கிலோ கஞ்சா போதைப் பொருளை கடத்திச் சென்ற டிப்பர் சாரதியை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர் யாழ்ப்பாணத்திலிருந்து கஞ்சாவை டிப்பரில் கடத்திச் சென்றபோது பூநகரி சங்குப்பிட்டி பாலம் அருகே கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது.

கைதானவர் முல்லைத்தீவு - விசுவமடு - தேராவில்'பகுதியை சேர்ந்தவர் என்று தெரிய வருகின்றது. கைது செய்யப்பட்ட சாரதி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# கறுப்பு ஜூலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழில் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 29

கறுப்பு ஜூலை படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தலும் பொதுக் கூட்டமும் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில், 1983 ஜூலை 25-27 ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 அரசியல் கைதிகள் உட்பட கலவரத்தில் கொல்லப்பட்டவர்கள் நினைவேந்தப்பட்டனர்.

வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் பொதுச் சுடரை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து, நிகழ்வில் பங்கேற்றவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சித் தலைவர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன் எம். பி., சுரேஷ் பிறேமசந்திரன், என். சிறீகாந்தா மற்றும் கட்சியினர், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் எமக்கு ஏமாற்றமே கிட்டுகிறது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

மன்னார், ஜூலை 29

**நாட்டில் தெரிவு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜனாதி பதியிடமும் காணாமல் ஆக்கப் பட்ட எம் உறவுகளுக்கான நீதியை கேட்டுக்கொண்டே இருக்கிறோம். இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை - இவ்வாறு மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்க தலைவி மனுவல் உதயசந்திரா தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட செயல கம் முன்பாக நேற்று நடத்தப் பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இவ்வாறு கூறி னார்.

மேலும், காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளான நாங்கள் கடந்த 15 வருடங்க ளுக்கு மேலாக வீதியில் நின்று போராடி வருகிறோம். ஆனால், எங்களை ஒருவருமே திரும்பி பார்ப்பதாகத் தெரியவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்க ளுக்கான பணிமனை ஊடாக உண்மையை கண்டறிவோம் எனக் கூறுகின்றபோதும், இதுவரை உண்மையை கண்ட றிய யாரும் முன்வரவில்லை.



ஆனால், இழப்பீடு வழங்குவ தற்காக மாத்திரம் முன்னுக்கு வருகின்றனர்.

எமது பிள்ளையின் உயிர் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியா? எங்கள் பிள்ளைகளை திருப்பி தந்தால் அவர்களுக்கு 4 இலட் சம் ரூபாயை எங்களால் தர முடியும். உயிருடன் ஒப்ப டைத்த பிள்ளைகளையே கேட் கிறோம் - என்றார். (ஐ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கப்பட்டன!

வடமராட்சி, ஜூலை 29


தொண்டைமானாறு சந்நிதி யான் ஆச்சிரமத்தால் கடந்த வாரம் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிகள் வழங் கப்பட்டன.

முத்துஜயன்கட்டு ஜீவநகர் அறநெறி பாடசாலையின் 52 மாணவர்களுக்கு சீருடை துணி வழங்கப்பட்டது. அத்துடன், அங்குள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பக்தர்களின் பாவ னைக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் மல சலகூடம் அமைத்து வழங்கப் பட்டது.

இதேபோன்று, ஒட்டுசுட் டான் - பரசங்குளம் மக்கள் குடிதண்ணீர் பெற வசதியாக ஏற்கனவே வெட்டப்பட்ட கிணறு 3 இலட்சத்து 40 ஆயி ரம் ரூபாய் செலவில் சீரமைத்து வழங்கப்பட்டது.

ஆவரங்கால் மேற்கை சேர்ந்த பெண் தலைமை குடும் பம் ஒன்றுக்கும் மட்டுவில் கிழக்கை சேர்ந்த பெண் தலைமை குடும்பம் ஒன்றுக்கும் தலா 75 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. (ஐ-02)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு புதிய மின்பிறப்பாக்கி கிடைத்தது



தென்மராட்சி, ஜூலை 29

சாவகச்சேரி ஆதார மருத்து வமனையின் புதிய கட்டடத் தொகுதிக்கான நிரந்தர மின் பிறப்பாக்கி வந்தடைந்துள்ளது என்று அதன் பதில் மருத்துவ அத்தியட்சகர் கோ. ரஜீவ் தெரி வித்துள்ளார்.

அத்துடன், மருத்துவமனை யின் சத்திர சிகிச்சை பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஆகியவை மீண்டும் செயல்படவுள்ளன. நேற்று முதல் வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஆகியவை மீண்டும் மருத்துவ மனையின் முன்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

மருத்துவமனையின் புதிய கட்டடத் தொகுதிக்கான நிரந் தர மின்பிறப்பாக்கி வந்தடைந் துள்ளது. மருத்துவமனையின் தடையற்ற மின்சார தேவைக்கு புதிய மின்பிறப்பாக்கி உதவும். இது 400 கிலோ வாட்ஸ் மின் சாரத்தை உற்பத்தி செய்ய வல் லது என்றும் அவர் கூறினார்.

மேலும், மருத்துவமனை யின் ஆளணி பற்றாக்குறையும் அடுத்த வாரம் பூர்த்தி செய்யப் படும் என்றும் மருத்துவ அத்தி யட்சகர் தெரிவித்தார். (ஐ)

# சட்டங்கள், விவாதங்களால் மட்டும் ஊழலை கட்டுப்படுத்த முடியாது!

## ரெலோ கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்கும் உறுதியான மன நிலை அனைத்து மக்கள் மத்தி யிலும் உருவாக வேண்டும். மக்களை ஏமாற்றும் செயல் பாடே மாற்றாக ஊழலுக்கு எதிரான கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அமையாது என்று கூறியுள்ளது தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ).

அந்தக் கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் இது தொடர் பில் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டவை வருமாறு,

ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்கும் உறுதியான மன நிலை அனைத்து மக்கள் மத்தி யிலும் உருவாக வேண்டும். "சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது, திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது, திருட னாய்ப் பார்த்து திருந்தாவிட் டால் திருட்டை ஒழிக்க முடி யாது" என்ற தத்துவ வரிகளே யதார்த்தமானவை.

அண்மையில், பாராளுமன் றத்தில் முன்வைக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான தேசிய வேலைத் திட்டத்துக்கு பாரா ளுமன்ற அங்கீகாரம் வழங் கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் சூழ்நிலையிலேயே இந்நிகழ்ச்சி திட்டம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்ட ஊழல் தடுப்பு சட்டத்தின் செயல் திறன் எந்த அளவு என்பது ஆராயப்பட வில்லை. இப்படி வேலைத் திட்டங்களையும் சட்ட மூலங் களையும் பாராளுமன்றத்தில் அறிவிக்க ஒரு தரப்பு இருக்க, இன்னும் ஒரு தரப்பு இது சம்பந்தமான விவாதங்களுக்கு வேட்பாளர்களை அழைக்கின்ற அறைகூவல்களை விடுத்த வண் ணம் உள்ளது. இவை தொடர்ந் தும் மக்களை ஏமாற்றும் செயல்பாடே மாற்றாக ஊழ லுக்கு எதிரான கட்டுப்படுத் தும் நடவடிக்கையாக அமையாது.

குறிப்பாக, வடக்கு மாகாண சபை இயங்குநிலையில் இருந்த போது ஊழல் குற்றச்சாட்டில் முழு அமைச்சரவையும் கலைக் கப்பட்டதை இங்கு குறிப்பிட முடியும். இதேபோன்று வடக் கின் மருத்துவத் துறையில் ஊழல் நிலவுதாக குற்றச்சாட்டு கள் எழுந்த வண்ணம் உள்ளன. இதையெல்லாம் பகிரங்க விவாதங்களால் கட்டுப்படுத்த முடியுமா?

சம்பந்தப்பட்ட தரப்புகளும் பொது மக்கள் கட்டமைப்புக ளும் ஒன்றிணைந்து ஊழலற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கும் வேலைத் திட்டத்தை செயல் படுத்த வேண்டும். தேர்தல் காலங்களில் மாத்திரம் விவாத பொருளாக விடயங்களை கையாண்டு விட்டு அந்த விட யங்களை கிடப்பில் போடுவது தமது நமது சுயலாபத்துக்கு வழிவகுமே தவிர ஊழலை கட்டுப்படுத்துவதாக அமையப் போவதில்லை - என்றுள்ளது. (ஐ)

# குளங்களை ஆக்கிரமிப்பது சுற்றுச்சூழலை பாதிக்கும்!

## சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 29

குளங்களை ஆக்கிரமித்து அதன் பரப்பளவை குறைத்து வருகின்ற செயல்பாடுகள் எதிர் காலத்தில் மிகப்பெரும் சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சமத்துவ கட்சியின் பொதுச் செயலாளர் மு. சந்திர குமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தை தனிநபர் ஒருவர் ஆக்கிரமிப்பது தொடர்பான விடயம் குறித்து நேற்று முன் தினம் நேரில் சென்று பார்வை யிட்டபோதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

தற்போது உலகம் மிகப் பெரும் பருவநிலை மாற்றத் துக்கு முகம் கொடுத்துள்ளது. நீருக்காக மக்கள் அலைந்து திரிகின்றார்கள். வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற னர். நிலத்தடி நீர் வேகமாக வற்றிச் செல்கிறது. இவ்வாறான நிலைமைகளின் காரணமாக மிக மோசமான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் எங்கள் மத்தியில் இருக்கின்ற குளங்களை பாதுகாத்து பேணுவதை விடுத்து அதனை தனிநபர்கள் சட்டவிரோதமாக ஆக்கிர மித்து வருவது என்பது ஆபத் தான நிலைமையை உருவாக் கும்.

எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட குளங்களை பாதுகாக்க வேண்டியது எங்கள் அனைவரினதும் மிகப்பெரிய பொறுப்பு. முன்னோர்கள் குளங்களை உருவாக்கி அதனை [illegible] அளித்ததாலேயே நாம் அதன் பயனை அனுபவித்து வருகின் றோம். எனவே, நாமும் இவற்றை அவ்வாறே பாது காத்து எதிர்கால சந்ததியின ருக்கு கையளிக்க வேண்டும்.

10 அடி கொள்ளளவு கொண்ட கனகாம்பிகை குளத்தை நம்பி நூற்றுக்கணக் கான விவசாய குடும்பங்கள் உள்ளன. இந்த பிரதேசத்தின் நிலத்தடி நீரும் இக்குளம் காரணமாகவே பாதுகாக் கப்பட்டு வருகிறது. எனவே, இக்குளத்தை சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும். குளத் தின் பின்பகுதியில் சுமார் 20 ஏக்கர் வரையான பரப்பளவு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இது ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்டது. தற்போது கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குதியில் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு அளவில் குளத்துக்குள் மண் நிரப்பப்பட்டு வருகிறது. இதனை தடுத்து குளத்தை பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் அரசு அமைப்பதே எமது எதிர்பார்ப்பு!

## அநுரகுமார திஸநாயக்கா



கொழும்பு, ஜூலை 29

**தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஆதரவை பெற்ற அரசாங்கத்தை அமைக்க வேண்டும். ஐக்கிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பு - என்று ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.**

தேசிய மக்கள் சக்தியின் முஸ்லிம் சகோதரத்துவத்தின் காலி பேரணியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் அனைத்து சமூகங்களின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி எதிர்பார்த்துள்ளது. நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடனேயே எமது அரசாங்கம் ஆட்சிக்கு வரும். தேசிய மக்கள் சக்தி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஆதரவை பெற்ற அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று எதிர்பார்த்துள்ளோம். ஐக்கிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே தனது கட்சியின் எதிர்பார்ப்பு.

சிங்கள வாக்காளர்களின் வாக்குகளுடன் தேர்தலை வெல்வது மாத்திரம் எங்களுக்கு போதுமானதல்ல - வெற்றி பெறுவதற்கு சிங்கள மக்களின் வாக்குகள் போதுமானவை. ஆனால், எங்களின் நோக்கம் அதுவல்ல. இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தை அமைப்பதற்கு நாங்கள் விரும்புகின்றோம்.

எங்கள் இயக்கம் தேர்தலில் வெற்றிபெறுவதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டதல்ல. உண்மையின் நலனை அடிப்படையாக வைத்தே எங்கள் இயக்கம் அரசியலில் ஈடுபடுகின்றது. எந்த சமூகமாவது பாரபட்சத்தை எதிர்கொண்டால் எங்கள் இயக்கம் அவர்களுக்கு ஆதரவளிக்கும்.

சஜித் பிரேமதாஸ குறித்து நான் அதிகம் பேசுவதில்லை அவரை நாங்கள் பேசவிடுகின்றோம் அது எங்களுக்கு தேவைக்கு அதிக பலனை அளிக்கின்றது - என்றார். (ஐ)

பொலிஸ் மா அதிபர் விவகாரம்:

# உயர்நீதிமன்ற வியாக்கியானத்தை பெறுவதற்கு ஜனாதிபதி தீர்மானம்!

கொழும்பு, ஜூலை 29

அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கிய ஒருவரை நீக்குவதற்கு உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளதா என்பது குறித்து ஜனாபதி ரணில் விக்கிரமசிங்க உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை கோருவதற்கு தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக பணியாற்ற மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயம் இடைக்கால தடை விதித்தது. இந்த நிலையில் தனக்கு அரசமைப்பின் கீழ் உள்ள அதிகாரங்களை பயன்படுத்தி ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை பெற முயல்வார்.

வாக்கெடுப்பின்போது அரசமைப்பு பேரவையின் உறுப்பினர் ஒருவர் வாக்களிக்காவிட்டால், வாக்களிப்பில் கலந்துகொள்ளாவிட்டால் அதனை ஆதரவாக கருதலாமா அல்லது எதிர்ப்பாக கருதலாமா என்பது குறித்து தெளிவான சட்டவிதிகள் இல்லாததால் இது குறித்து உயர்நீதிமன்றத்தின் தெளிவுபடுத்தல்களை ஜனாதிபதி கோரவுள்ளார்.

அதாவது, அரசமைப்பின் 41 சி மற்றும் 41 ஜி குறித்து தெளிவான தெளிவுபடுத்தல்களை முன்வைக்குமாறு நீதிமன்றத்தை ஜனாதிபதி கோரவுள்ளார். 41 சி அரசமைப்பின் அனுமதியுடன் அதிகாரிகளை அகற்றுவதுடன் தொடர்புபட்டது. 41 ஜி அரசமைப்பு பேரவையின் கடமைகள் அதிகாரங்கள் தொடர்புபட்டதாகும். (ஐ)

# பொலிஸ் மா அதிபர் விவகாரம்; பாதுகாப்பு தொடர்பில் கரிசனை!

கொழும்பு, ஜூலை 29

பொலிஸ்மா அதிபரை நியமிப்பதில் உள்ள முட்டுக்கட்டைகள் தொடர்கின்றன. இந் நிலையில், நீண்டகால முட்டுக்கட்டைகள் பொலிஸாரின் செயல்பாடுகளில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். இதனால், பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் எழுந்துள்ளன என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

செயல்பாடுகள் குறித்த வழிகாட்டுதல்கள், ஆவணங்களில் கையொப்பமிடுதல் உள்ளிட்ட செயல்பாடுகளை முன்னெடுக்க பொலிஸ்மா அதிபர் அல்லது பதில் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் வழிகாட்டல்கள் தேவையாகவுள்ளன.

அவர்கள் இல்லாமல் சுமார் ஒரு வாரத்துக்கு குறுகிய காலத்துக்கு நிர்வகிக்க முடியும் என்றாலும், தங்கள் கடமைகளை முன்னெடுத்து செல்வது என்பது குறித்து ஜனாதிபதி அல்லது அரசாங்கத்திடமிருந்து வழிகாட்டுதல் தேவைப்படும் என்றும் அந்த அதிகாரி விளக்கியுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் அல்லது பதில் பொலிஸ்மா அதிபர் இல்லாதமை நிலைமையை சிக்கலாக்கியுள்ள இதே நேரம், பிரதி பொலிஸ் மா அதிபர் (நிர்வாகம்) பதவியும் காலியாக உள்ளது என்றும் கூறியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் பொலிஸ் கண்காணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன கடந்த வாரம் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டமையை அடுத்து அந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் இரண்டு உயர் பதவிகளும் வெற்றிடமாக இருப்பது முன்னெப்போதும் இல்லாதது என்று அதிகாரி விளக்கியுள்ளார். பொலிஸ் மா அதிபர் அல்லது பதில் பொலிஸ் மா அதிபர் இல்லாமல் திணைக்களம் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பொலிஸ் மா அதிபர் இல்லாதது பாதுகாப்புக் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், பொலிஸ் மா அதிபர் நியமனத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

# மாகாண நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு; புதிய வழிகாட்டுதல்கள் வெளியீடு!

கொழும்பு, ஜூலை 29

மாகாண நிர்வாக சேவை அதிகாரிகளை தேசிய சேவையில் இணையான பதவிகளுக்கு உள்வாங்குவது தொடர்பான புதிய வழிகாட்டுதல்களை பொதுச் சேவை ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த வழிகாட்டுதல்களை கொண்ட புதிய சுற்றறிக்கை, ஏற்கனவே 2020 ஜனவரி 30 மற்றும் 2024 பெப்ரவரி 27 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட முந்தைய சுற்றறிக்கைகளில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது.

வழிகாட்டுதல்களின்படி, மாகாண பொது சேவைகளான கற்பித்தல், தாதி, துணை மருத்துவ சேவை போன்றவற்றில் பணியாற்றுபவர்கள், அதிகாரத்தை வைத்திருக்கும் தொடர்புடைய நியமன அதிகாரியால் தேசிய சேவையில் உள்ள இணையான பதவிகளுக்கு உள்வாங்கப்படலாம்.

புதிய வழிகாட்டுதல்களின்படி, உயர்தர பரீட்சையின் இசற் மதிப்பெண்ணின் அடிப்படையில், மாகாண சேவையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், இடமாற்றம் கோரும் பணியாளர் ஒருவர் மாகாண சேவையின் தற்போதைய பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு, சம்பந்தப்பட்ட அமைச்சின் கீழ் அறிமுக பயிற்சியை பெற்றிருக்க வேண்டும். இதற்கு மாகாண அரச சேவையின் நியமனம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இதன்படி, இடமாற்றம் கோரும் அதிகாரி ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். மாகாண பொது சேவையின் சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிக்கு மாகாண பொது சேவைகளில் இருந்து அதிகாரியை நிரந்தரமாக விடுவிக்க அதிகாரம் உள்ளது என்று வழிகாட்டுதல்கள் கூறுகின்றன. (ஐ)

# 1,700 ரூபாய் சம்பளம் கோரி ஹற்றனில் ஆர்ப்பாட்டம்!



ஹற்றன், ஜூலை 29

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாயாக அதிகரிக்குமாறு வலியுறுத்தி, ஹற்றன் நகரில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் முற்கோக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டுள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாயாக அதிகரித்து வழங்க, பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது, மலையக பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை, சம்பள உரிமை, வீட்டு உரிமை, வேலை வாய்ப்புகள் போராட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது கலவரம் அடக்கும் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், எம்.உதயகுமார், எம்.வேலுகுமார், முன்னாள் மாகாண உறுப்பினர்கள், உள் ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள், செயல்பாட்டாளர்கள், தொழிலாளர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தால் ஹற்றன் நகரில் பெரும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. (ஐ)

# கைபேசியை அபகரிக்கவே ஓட்டோ சாரதி படுகொலை!

## போதை ஆசாமிகள் வெறிச்செயல்

கொழும்பு, ஜூலை 29

கடந்த வாரம் முச்சக்கர வண்டியிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. அவரின் கைபேசியை அபகரிப்பதற்காகவே அவர் குத்திக் கொல்லப்பட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு - வார்ட் பிளேஸில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில்,

முச்சக்கர வண்டி சாரதியான இளைஞரிடமிருந்து கைபேசியை அபகரிக்க சந்தேகநபர்கள் முயன்றுள்ளனர். இதன்போது, அவரை கூரிய ஆயுதத்தால் குத்தி கொன்றனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

கைபேசியை அபகரித்த இருவரும் 4 ஆயிரம் ரூபாய்க்கு அதனை அடகு வைத்து போதைப்பொருள் வாங்கியுள்ளனர் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது. அத்துடன், இந்தக் கொலையில் மூன்றாவது நபர் ஒருவரும் தொடர்புபட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாராளுமன்றத்தில் தொப்பி அணிய யாருக்கும் தைரியம் இருக்கவில்லை"

கல்முனை, ஜூலை 29

**பாராளுமன்றத்தில் தொப்பி அணிவதற்கு யாருக்கும் தைரியம் இருக்கவில்லை. அந்தத் தைரியத்தை கையில் எடுத்து, இந்த நாட்டு முஸ்லிம் சமுதாயத்துக்காக குரல் கொடுத்தது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் இயக்கம் மட்டுமே- இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி எச். எம். முகம்மட் ஹரீஸ் தெரிவித்தார்.**

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற இயக்கத்தின் மூலம் முஸ்லிம் சமூகத்தையும், நமது மதத்தையும் பாதுகாப்பதற்காக இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று ஆயிரம் ஆயிரம் போராளிகள் ஒன்று கூடி இந்த இயக்கத்தை ஆரம்பித்தோம். அன்று ஒரு நாள் முஸ்லிம்களின் கலிமா, முஸ்லிம் சமூகம் சம்பந்தமான பேச்சு பாராளுமன்றத்தில் பேசுவதற்கு அந்த நேரம் யாரும் இருக்கவில்லை. பிஸ்மில்லாஹ் என்ற வார்த்தை பாராளுமன்றத்தில் ஒலித்தது மர்ஹூம் அஷ்ரப் என்பவரின் வாயில்தான். அதற்கு முன்பு பிஸ்மில்லாஹ் சொல்வதற்கு யாருக்கும் தைரியம் இருக்கவில்லை. தொப்பி அணிவதற்கு பாராளுமன்றத்தில் தைரியம் இருக்கவில்லை. அல்லாஹூ அக்பர் என்று சொல்வதற்கு யாருக்கும் தைரியம் இருக்கவில்லை என்றும் ஹரீஸ் குறிப்பிட்டார்.

அம்பாறை - வரிப்பத்தான் சேனை பொது மைதானத்தில்



நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காத்தான்குடியில், ஏறாவூரில் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது தன்னந்தனியாக நின்று பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து அந்த மக்களுக்கு பாதுகாப்பு முகாம்களை திறந்து கொடுத்தவர் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் மட்டுமே. அவர் உரிமைக்காக மட்டும் குரல் கொடுத்தவர் அல்லர். இந்த மண்ணில் அபிவிருத்தியை ஏற்படுத்தி ஒரு புரட்சியை செய்தார் என்றும் ஹரீஸ் குறிப்பிட்டார். (எ)




## அல் மிஸ்பாஹ் வித்தியாலய அணி தேசிய மட்டத்துக்கு தெரிவானது

திருகோணமலை, ஜூலை 29

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய பட்மிண்டன் அணியினர் தேசிய மட்டத்துக்கு தெரிவாகினர்.

கடந்த 25, 26, 27ஆம் திகதிகளில் திருகோணமலை மெக்கெய்ஸர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பட்மிண்டன் போட்டியில் கல்முனை அல் மிஸ்பாஹ் பாடசாலையின் 16 வயது ஆண்கள் அணியினர் சிறப்பான முறையில் தமது திறமைகளை வெளிக்காட்டி, இறுதிப் போட்டியில் இரண்டாம்

இடத்தை பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். (எ)



## இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு முதலுதவி விழிப்புணர்வு நிகழ்வு

சம்மாந்துறை, ஜூலை 29

சம்மாந்துறை அஸ்ஹரியன் இளைஞர் நட்புறவு அமைப்பின் ஏற்பாட்டில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலில் சம்மாந்துறை அல் அஸ்ஹர் வித்தியாலய மண்டபத்தில் இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான முதலுதவி பயிற்சியும், பாலியல் தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் நடத்தப்பட்டது.

இதில் வளவாளர்களாக மருத்துவர்களான ஐ. எல். ஜலால்தீன், ஏ. எஸ். எம். பௌஸாத், முஹம்மட் இர்ஸாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

160 இளைஞர், யுவதிகள் இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பங்கேற்றனர். (எ)

## பௌதிகவியல் பாட செயலமர்வு

சம்மாந்துறை, ஜூலை 29

சம்மாந்துறை பட்டதாரிகள் அமைப்பினால் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பௌதிகவியல் பாட செய்முறை செயலமர்வு நடைபெற்றது.

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கும் மற்றும் 2025, 2026 இல் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்குமான பௌதிகவியல் செயன்முறை பயிற்சி முகாம் பொறியியல் மற்றும் மருத்துவத் துறைக்கான பட்டதாரிகள் அமைப்பினால் பாடசாலைகளின் அதிபர்களின் பூரண ஒத்துழைப்புடன் மிகச்சிறந்த முறையில் நடத்தப்பட்டது.

செய்முறை செயல்திட்டத்தை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி அமைப்பின் அங்கத்தவர்களால் செயல்படுத்தப்பட்டது.

இந்தச் செயல் திட்டத்தில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மற்றும் அல் மர்ஜான் பெண்கள் உயர் பாடசாலை மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். (எ)

## ஜனாஸா எரிப்பு குறித்து விசாரணை ஜனாதிபதி செயலகம்மீது அதிருப்தி

கல்முனை, ஜூலை 29

ஜனாஸா எரிப்பை விசாரிக்க ஆணைக்குழு நிறுவ வேண்டும் என்ற முஸ்லிங்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி செயலகம் வழங்கியுள்ள பதிலில் திருப்தியில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் - 19 பெருந் தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை தகனம் செய்வது தொடர்பில் ஒரு பக்கச்சார்பாக முடிவெடுத்த தரப்பினர்மீது பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவும், பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் மனங்களை சாந்தப்படுத்தவும் ஜனாதிபதி ஆணைக்குழுவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் உடனடியாக நியமிக்க வேண்டும்.

ஜனாஸா தகனம் மூலம், அநியாய சம்பவத்தை அரங்கேற்றிய குழுவுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று முஸ்லிம் சமூகத்தின் சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தான் அனுப்பிய கடிதத்துக்கு ஜனாதிபதி செயலகம் அனுப்பியுள்ள பதில் திருப்தியளிக்கவில்லை என ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ. ஏ. கலீலுர் ரஹ்மான் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

"கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது குறித்து" என்ற வார்த்தை கூட இல்லாமல் "கருத்துகள் மற்றும் பரிந்துரைகள்" என்று மட்டுமே கடிதம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் நான் மிகவும் வருத்தப்பட்டேன். இந்த பதில் கடிதத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ளபடி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமீது நான் வைக்கும் "நம்பிக்கை" அப்படியே உள்ளது எனவே கோவிட் சடலங்களை தகனம் செய்தமை தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவை நிறுவ மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பள்ளிவாசல் புனரமைப்புக்கு ஹரீஸ் எம். பி. நிதி ஒதுக்கீடு



கல்முனை, ஜூலை 29

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான எச். எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் வரிப்பத்தான் சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கட்டட மேல்தள வேலைகளுக்காக 5 மில்லியன் ரூபாய் நிதியில் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வரிப்பத்தான்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ். உதுமாலெப்பையின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஹரீஸ் எம். பி. பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தை நம்பிக்கையாளர் சபையினரிடம் வழங்கி வைத்தார். (எ)

## 3ஆம் நிலை கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்





மட்டக்களப்பு, ஜூலை 29

மட்டக்களப்பில் தொழில் வழிகாட்டல் ஊடாக மூன்றாம் நிலை கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

தொழில் வழிகாட்டல் ஊடாக மூன்றாம் நிலை கல்வியை மேம்படுத்தல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பயிற்சி நெறியை பூர்த்தி செய்த மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே. ஜே. முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் பாடசாலையின்மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல்

காஸா, ஜூலை 29

காஸாவில் உள்ள பாடசாலை மீது இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 30 பேர் பலியாகினர். ஹமாஸ் போராளிகள் இந்த பாடசாலையில் ஆயுதங்களைப் பதுக்கி வைத்து, தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்று இஸ்ரேல் இராணுவம் விளக்கமளித்துள்ளது.

இஸ்ரேல் படையினர் காஸாவின் மத்திய பகுதியில் வான் வழியே நேற்று அதிரடியாக தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில், டெய்ர் அல் - பலா பகுதியிலுள்ள பாடசாலை கடுமையாக பாதிக்கப்பட்டது. இதில், அந்த பாடசாலையில் தஞ்சமடைந்திருந்த 30 பேர் உயிரிழந்தனர்.

இதில், காயமடைந்த நபர்கள் நகரில் அல் அக்சா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இது பற்றி இஸ்ரேல் இராணுவம் கூறும்போது, இந்த பாடசாலையில் ஹமாஸ் அமைப்பின் தளபதி மற்றும் அந்த அமைப்பின் கட்டுப்பாட்டு மையம் செயல்பட்டு வந்துள்ளது.



அதில், ஆயுதங்களைப் பதுக்கி வைத்து, தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது. இதுதவிர வேறு பகுதிகளில் நடந்த தாக்குதல்களில் 11 பேர் பலியாகினர் என காஸா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, எகிப்து, கட்டார் மற்றும் இஸ்ரேல் நாடுகள், இத்தாலியில் ஒன்றாக சந்தித்து, பணயக் கைதிகள் விவகாரம் மற்றும் போர்நிறுத்த பேச்சுகள் ஆகியவற்றை பற்றி இன்னும் சில நாட்களில் ஆலோசனை நடத்த முடிவு செய்துள்ளன.

இந்தச் சூழலிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காஸா மீது இஸ்ரேல் தொடுத்த போரால் இதுவரை 39 ஆயிரத்து 100இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என காஸா சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# ஏமன் விமான நிலையம்மீது அமெரிக்கா கடும் தாக்குதல்

சனா, ஜூலை 29

ஏமன் விமான நிலையம் மீது அமெரிக்கா, பிரிட்டன் படைகள் இணைந்து வான் வழித் தாக்குதல் நடத்தியுள்ளன.

இஸ்ரேல் மீது ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதற்குப் பதிலடியாக ஹமாஸ் மீது போர் அறிவித்த இஸ் ரேல், காஸாமுனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேலுக்கும், ஹமாஸ் ஆயுதக்குழுவுக்கும் இடையே யான போர் பல மாதங்களாக நீடித்து வருகிறது.

இந்த நிலையில், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள விமான நிலையம் மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் படைகள் வான் வழித் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஏமனின் ஹூடைடா நகரில் உள்ள விமான நிலையம் மீது இந்த வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. அதே போன்று, ஏமனின் கமரன் தீவு மீதும் அமெரிக்கா, பிரிட்டன் இணைந்து வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளன.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை. முன்னதாக, இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக கடந்த 21ஆம் திகதி ஏமனின் ஹூடைடா துறைமுகம் மீது இஸ்ரேல் விமானப் படை குண்டுமழை பொழிந்தது. இந்தத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். (எ)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்; ட்ரம்பை முந்தும் கமலா ஹாரிஸ்

வாஷிங்டன், ஜூலை 29

கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸுக்கு 44 சதவீதம் பேரும் ட்ரம்புக்கு 42 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்தனர்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கிறது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார். மேலும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை அவர் முன் மொழிந்தார். அப்போது, முதலே ஜனநாயக கட்சியின் வேட்பாளர் போட்டியில் கமலா ஹாரிஸின் கை ஓங்கி யது. இருப்பினும் 2 முறை ஜனாதிபதியாக இருந்த பராக் ஒபாமா, கமலா ஹாரிஸுக்கு ஆதரவு தெரிவிக்காமல் இருந்து வந்தார். இந்த நிலையில் "கமலா ஹாரிஸ் அமெரிக்காவின் சிறந்த ஜனாதிபதியாக வருவார்" எனக் கூறி ஒபாமாவும் தனது ஆதரவை தெரிவித்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுவை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் ஆவணங்களில் கமலா ஹாரிஸ் கையெழுத்திட்டார். இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான எனது வேட்புமனுவை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் படிவத்தில் கையெழுத்திட்டுள்ளேன். ஒவ்வொரு வாக்குகளையும் பெற கடுமையாக உழைப்பேன். நவம்பரில் நடைபெறவிருக்கும் தேர்தலில், எங்கள் மக்கள் இயக்க பிரசாரம் வெற்றி பெறும்" என தெரிவித்தார்.

குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ட்ரம்ப் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். இதனிடையே அமெரிக்காவின் பிரபல செய்தி நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் ட்ரம்பை விட கமலா ஹாரிஸுக்கு ஆதரவு சற்று அதிகம் இருப்பது தெரிய வந்துள்ளது. இந்தக் கருத்துக் கணிப்பில், கமலா ஹாரிஸுக்கு 44 சதவீதம் பேரும் ட்ரம்புக்கு 42 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்தனர். அதாவது, ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் கூடுதலாக 2 சதவீத ஆதரவை பெற்றுள்ளார். (எ)

# சீன தொழிற்சாலையில் பயங்கர வெடிவிபத்து

பீஜிங், ஜூலை 29

உலோக தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஹினன் மாகாணம் யங்சங் நகரில் தொழிற் பூங்கா உள்ளது. இந்த தொழிற் பூங்காவில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன.

இதனிடையே, இந்தத் தொழிற் பூங்காவில் உலோக தொழிற்சாலையும் உள்ளது. இதில் பலர் வேலை செய்து வருகின்றனர்.


இந்த நிலையில், உலோக தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வழக்கமான பணிகளை செய்துகொண்டிருந்தனர். அப்போது தொழிற்சாலையில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடிவிபத்து குறித்து தகவலறிந்த பொலிஸார் விரைந்து



வந்து காயமடைந்த 14 பேரை மீட்டனர். ஆனால், இந்த வெடி விபத்தில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். (எ)

# இஸ்ரேல்மீது ஹிஸ்புல்லா ரொக்கெட் வீசி தாக்குதல்



டெல் அவிவ், ஜூலை 29

இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் 10 பேர் பலியாகினர். இந்த நிலையில் அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடனடியாக நாடு திரும்பவுள்ளார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்திய நாளில் இருந்து, இரு தரப்பினருக்கும் இடையேயான மோதல் முற்றியுள்ளது. காஸாவை இலக்காக கொண்டு இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் பலியாகினர்.

இந்த நிலையில், இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள கோலன் ஹைட்ஸ் பகுதியில் உதைபந்தாட்ட திடல் ஒன்றில் திடீரென ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், குழந்தைகள் உட்பட 10 பேர் வரை உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில், ஹிஸ்புல்லா குழுவை சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர். அதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால், அமெரிக்காவில் இருந்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடனடியாக நாடு திரும்புகிறார் என அவருடைய அலுவலம் தெரிவித்துள்ளது. (எ)

# இந்தியா - அமெரிக்கா இடையே கலாசார சொத்துகள் ஒப்பந்தம்

புதுடில்லி, ஜூலை 29

பழமையான பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க இந்தியா - அமெரிக்கா இடையே கலாசார சொத்துகள் ஒப்பந்தம் கையெழுத்தானது.

சுதந்திரத்துக்கு முன்னதாகவும், அதற்குப் பின்பும் இந்தியாவில் இருந்து பல்வேறு விலை மதிக்க முடியாத பழங்காலப் பொருட்கள், கலைச் சிற்பங்கள் வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்லப்பட்டன. இந்த அரிய பொக்கிஷங்கள் உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு நாடுகளின் அருங்காட்சியகங்கள், நிறுவனங்கள், தனிநபர்களின் பாதுகாப்பில் உள்ளன.

1970இல் நடந்த யுனெஸ்கோ மாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஒரு நாட்டிலிருந்து பழங்கால பொருட்கள், பொக்கிஷங்களை கடத்திச் செல்வது தடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் 46ஆவது யுனெஸ்கோ உலக பாரம்பரிய சபை கூட்டம் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத்தில் இந்தியா, அமெரிக்கா இடையே கலாசார சொத்துகள் சார் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தியாவிலிருந்து பழமையான பொருட்கள், கலைச் சிற்பங்கள், கலைப் பொக்கிஷங்களை அமெரிக்காவுக்குக் கடத்திச் செல்வதைத் தடுக்க இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. மத்திய கலாசாரம், சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் முன்னிலையில் இந்த ஒப்பந்தத்தில் மத்திய அரசின் கலாசாரத்துறை செயலர் கோவிந்த் மோகன், இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் எரிக் கார்செட்டி ஆகியோர் கையெழுத்திட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர கட்சியின் கூட்டணி 31ஆம் திகதி அறிவிக்கப்படும்



கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை சிறீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் 31ஆம் திகதி வெளிப்படுத்தும் என்று விவசாய மற்றும் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சரும் சிறீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறீலங்கா சுதந்திர கட்சி பிளவுபடவில்லை. தற்போது ஒரேயொரு சட்டபூர்வமான சிறீலங்கா சுதந்திர கட்சியே உள்ளது. சிறீலங்கா சுதந்திர கட்சி தமது கையில் இருப்பதாக சிலர் கூறுகின்ற கருத்துகள் செல்லுபடியாகாது - என்றும் கூறினார். (ஐ)

# அஸ்வெசும இரண்டாம் கட்டம் 31ஆம் திகதிக்குள் நிறைவுபெறும்



கொழும்பு, ஜூலை 29

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடர்பான கணக்கெடுப்பை எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்கத் தவறிய குடும்பங்களுக்கு முதல் கட்டமாகக் கடந்த பெப்ரவரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இதன்படி, 4 இலட்சத்து 54 ஆயிரத்து 924 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜயரத்ன குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வாகன இறக்குமதி கட்டுப்பாடு மிகவிரைவில் தளர்த்தப்படும்!

## நிதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அடுத்த சில மாதங்களில் தளர்த்தப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் அந்நிய செலாவணி தட்டுப்பாடு காரணமாக, வாகனங்கள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டு அத்தியாவசிய வாகனங்களுக்கான தடை படிப்படியாகத் தளர்த்தப்பட்டது.

இதன்படி, அடுத்த சில மாதங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஏனைய வாகன இறக்குமதி கட்டுப் பாடுகளும் தளர்த்தப்படும். பொருளாதார சீர்திருத்தங் களால் அரசாங்கத்தின் வருமானம் மற்றும் அந்நிய செலாவணி வளர்ச்சியடைந்ததால் இந்த இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கமுடிந்தது. அரசாங்கம் விரும்பிய இலக்குகளை அடைய முடிந்தது எனவும் நிதியமைச்சு கூறியுள்ளது.

இந்நிலையில், காலவரையின்றி அதிகரித்துள்ள வாகனங்களின் விலை, வாகனங்கள் இறக்குமதியால் 60வீதம் வரையில் குறைவடையும் என்று வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# தயாசிறி உள்ளிட்ட குழு ஒகஸ்ட் 8இல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமம்

## ஒப்பந்தங்களை வெளியிடுமாறு மைத்திரி சவால்

கொழும்பு, ஜூலை 29

தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட குழுவினர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் செய்துள்ள ஒப்பந்தங்களை முடிந்தால் வெளியிடுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சவால் விடுத்துள்ளார்.

ஒகஸ்ட் 8 ஆம் திகதி தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட குழுவினர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொள்ள ஒப்பந்தம் செய்துள்ளனர். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு நான் மாத்திரமே பொறுப்பு என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்த கருத்துக்கு கண்டனம் தெரிவிக்கிறேன்.

ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் அல்லர் என்றும் அவரை சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் தயாசிறி தெரிவித்திருந்தமை உண்மைக்குப் புறம்பானது. சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸவை நிறுத்தும் பிரேரணை தமது கட்சியின் நிறைவேற்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் மைத்திரி தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக விஜயதாஸவை நிறைவேற்று சபை நியமிப்பதற்கு முன்னரே, யாப்பு ரீதியாக அவருக்கு கட்சி உறுப்புரிமை வழங்கப்பட்டது. சுதந்திர கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஏலம் விடுவதற்கு ஒரு குழுவும் தமது தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காக கட்சியை ஐக்கிய மக்கள் சக்தியுடன் காட்டிக் கொடுக்க மற்றொரு குழுவும் செயல்படுவதாக மைத்திரி குற்றஞ்சாட்டினார். (எ)

# காரில் கஞ்சா வைக்க முயற்சி; கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம்!

கொழும்பு, ஜூலை 29

வீதி சோதனையின்போது காருக்குள் போதைப்பொருளை வைத்து இளைஞர்களை கைது செய்ய முயன்றார் என்று சமூக ஊடகங்களில் பரவிய காணொலியில் காணப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு தெற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவுக்கு அமையவே அந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டார். பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றியவர். வேறு சில பொலிஸ் அதிகாரிகளும் பணியில் இருந்தபோதே அவர் கான்ஸ்டபிள் இவ்வாறு செயல்பட்டுள்ளார்.

இந்த நிலையில், உத்தியோக பூர்வ ஆடைகளை அணிந்து வெற்றிலை பாக்கு உண்டமை, சாரதி அல்லது வாகனத்தில் பயணிக்காத வேறு நபர் மற்றும் உதவி உத்தியோகத்தர் இல்லாமல் வாகனத்தை சோதனை செய்தமை போன்ற பல குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன என்று கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

ஜனாதிபதித் தேர்தல்:

# ஆரம்ப அச்சிடல் பணிகள் அரச அச்சகத்தால் பூர்த்தி!

கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான ஆரம்ப அச்சிடல் பணிகள் அரசாங்க அச்சகத்தால் பூர்த்தி செய்யப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள், கட்டுப்பணம் தொடர்பான அச்சிடும் பணிகளை அரச அச்சகம் பூர்த்தி செய்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் அதிகாரிகளை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலும் அரசாங்க அச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மாவட்ட செயலாளரை தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியாக நியமித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியை அறிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான அடுத்த கட்ட ஆவணங்களை அச்சிடும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்தார். (ஐ)

# டெங்கு பரவல் தீவிரம் 32,000 கடந்த நோயாளர்



கொழும்பு, ஜூலை 29

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 32 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 32 ஆயிரத்து 78 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தி லேயே பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 12 பேர் டெங்கு நோயால் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நீரில் மூழ்கி இருவர் பலி!

கொழும்பு, ஜூலை 29

வெவ்வேறு பிரதேசங்களில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த இரு சம்பவங்களும் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன.

அநுராதபுரம் - கலாவெவை பகுதியில் கலா ஏரியில் நீராடிய ஒருவர் உயிரிழந்தார். 47 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை, குருநாகல் எஹடுவெவ பொலிஸ் பிரிவில் மகுலேவ ஏரியில் நீராடிய பெண் ஒருவர் உயிரிழந்தார். இதே இடத்தை சேர்ந்த 58 வயது பெண்ணே உயிரிழந்தவராவார்.

# அரச ஊழியரின் சம்பளம் 36 சதவீதம் குறைந்துள்ளது

## பொருளியல் பேராசிரியர் வசந்த

கொழும்பு, ஜூலை 29

2020, 2024 ஆண்டுகளுக்கு இடையே அரச ஊழியர் ஒருவரின் சம்பளத்தின் உண்மையான பெறுமதி 36சதவீதத்தால் குறைந்துள்ளது என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் துறையின் பேராசிரியர் வசந்த அத்து கோரள தெரிவித்துள்ளார்.

மேலும், தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தின் உண்மையான பெறுமதி சுமார் 20வீதத்தால் குறைவடைந்துள்ளது.

இதற்கமைய, 2020 ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் ரூபாய் சம்பளம் பெற்ற ஒருவரின் உண்மையான சம்பளம் 32 ஆயிரம் ரூபாயாகக் குறைந்துள்ளது. 2 இலட்சம் ரூபாய் சம்பளம் பெற்ற ஒருவரின் உண்மையான சம்பளத்தின் பெறுமதி ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய்.

தற்போது வரி செலுத்த வேண்டியுள்ளதன் காரணமாக ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் நபரின் கொள்வனவு சக்தியும் குறைந்துள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரமான...

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், “மாவட்ட செயலாளரை தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் அரச ஊழியர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வகையில் விசேட சுற்றறிக்கை இரு நாட்களில் வெளியாகும். தேர்தல் செயல்பாடுகளுக்கு சகல அரச ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

“தேர்தல் பணிகளின் போது பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸாரின் எண்ணிக்கை, செலவுகள் தொடர்பான விவரங்களை பொலிஸ் திணைக்களம் வழங்கியுள்ளது. அரச அச்சகத் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கு தேவையான நிதியை விடுவிக்குமாறு திறைசேரிக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

“வேட்பு மனுக்கள் எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேர்தல் செலவுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்துக்கு அமைய பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் அல்லது செயலாளர்கள் மற்றும் சுயாதீன வேட்பாளர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

“ஊடக பிரசாரம் குறித்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் கலந்துரையாடவுள்ளோம். சகல வேட்பாளர்களுக்கும் நியாயமான வகையில் வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்” - என்றார். (ஐ)

## கட்சி...

வருமாறு,

கேள்வி - வேட்பாளரின் நிலை எப்படி உள்ளது?

பதில் - திங்கட்கிழமை (இன்று) முடிவு செய்வோம். திங்கட்கிழமை வரை காத்திருங்கள்.

கேள்வி - தம்மிக பெரேரா உங்களுடன் இருப்பதை பார்த்தோமே?

பதில் - ஒன்றாகவே அமர்ந்திருந்தோம். அவர் எமது எம். பி. அல்லவா!

கேள்வி - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதாக ஜனாதிபதி காலியில் அறிவித்துள்ளாரே?

பதில் - ஆம் நல்லதுதானே.

கேள்வி - அவர் ஆதரிக்கப்படுவாரா?

இல்லை... எங்கள் கட்சியில் இருந்து தெரிவு செய்யும் வேட்பாளரையே நாங்கள் ஆதரிப்போம். அதை எங்கள் கட்சிதான் தீர்மானிக்க வேண்டும். நான் எங்கள் கட்சி சொல்வதேயே கேட்கிறேன். அவரை ஆதரிக்கச் சொன்னால், மகிழ்ச்சியுடன் ஆதரிப்போம். ஆனால், அவருக்கு எதிராக வேறு யாராவது நிறுத்துவோம் என்று கட்சி கூறினால் அதற்கும் சம்மதிப்போம். (ஐ)

## பண்ணையில்...

ஈடுபட்டு வருகின்றன. இதே போன்று, குடிபோதையில் இடையூறு ஏற்படுத்தும் விதமாகவும் சிலர் செயல்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக புதிதாக பொறுப்பேற்ற சூரிய பண்டாரவின் வழிகாட்டலின் கீழ் விசேட பொலிஸ் குழு ஒன்று நேற்று திடீர் சோதனையில் களமிறங்கியது.

இதன்போது, பண்ணை பகுதியில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட குழு ஒன்றை கைது செய்ததுடன், அவர்களின் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பறிமுதல் செய்தது. இதே போன்று மதுபோதையில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியவர்களையும் கைது செய்தது.

இதேவேளை, போதைப்பொருளை கட்டுப்படுத்த விசேட பொலிஸ் குழுக்களும் களத்தில் இறக்கிவிடப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரி 20...

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அந்த அணி 6 விக்கெட்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்மிருதி மந்தனா 60, றீஷா கோஷ் 30, றுட்ரியஸ் 29 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் கவிசா டில்ஹரி 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 18 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. அணித் தலைவி சமரி அத்தப்பத்து 61 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். ஹர்சிதா சமரவிக்கிரம 69 ஓட்டங்களையும் கவிசா டில்ஹரி 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். (ஐ)

## உரிமம்...

செய்யப்படாமை அதிகரித்துள்ளன. இதனால், கைபேசி விற்பனையை ஒழுங்குபடுத்துவதில் ஆணைக்குழுவுக்கு சிரமம் ஏற்பட்டமையால் இந்த அபராத தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பத்திரண தெரிவித்துள்ளார்.

இதன்படி, இனிமேல் உரிமம் பெறாத கடைகளுக்கு எதிராக கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படும். பதிவு பெறும் கடைகள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கைபேசிகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 61இலங்கைத்...

அகதிகள் முகமையால் வெளியிடப்பட்ட அறிக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொலைதூர தீவில் சிக்கித் தவிக்கும் 61 புகலிடக் கோரிக்கையாளர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த புகலிட கோரிக்கையாளர்கள் ஜி4எஸ் ஊழியர்களால் பாதுகாக்கப்பட்ட உதைபந்தாட்ட ஆடுகளத்தின் அளவு வேலியிடப்பட்ட பகுதியில் அடைக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அவர்கள் சமைத்து சாப்பிட அனுமதிக்கப்படவில்லை. எலிக் கடிக்கு ஆளாகியுள்ளனர். மேலும் அவர்களின் கூடாரங்களையும் எலிகள் துளையிட்டுள்ளன. அவர்களின் நடமாட்டம் கடுமையாகத் தடை செய்யப்பட்டதுடன், தீவிர கண்காணிப்பின் கீழ், குறிப்பிட்ட நேரங்களில் முகாமுக்கு அருகில் உள்ள ஒரு சிறிய கடற்கரைக்கு செல்ல அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களில் பலர், டியாகோ கார்சியா மீதான அவர்களின் சட்டவிரோத தடுப்புக் கோரிக்கையை விசாரிக்க நீதிமன்ற தீர்ப்பின் மீது நம்பிக்கை வைத்துள்ள னர்.

இங்குள்ள புகலிட கோரிக்கையாளர்கள், 2021 ஒக்ரோபர் மூன்றாம் திகதி டியாகோ கார்சியாவை வந்தடைந்தனர்.

அவர்கள் பயணித்த கப்பல் இந்தியப் பெருங்கடலில் சிக்கலில் சிக்கியபோது இரண்டு ரோயல் கடற்படை கப்பல்களால் மீட்கப்பட்ட பின்னர் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், புகலிட கோரிக்கையாளர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், அனைத்து தனிநபர்க ளும் சர்வதேச பாதுகாப்புக்கான நிலுவையில் உள்ள கோரிக்கைகளை ஆணையாளர் ஏற்றுக்கொள்வதால், சர்வதேச சட்டத்தை மீறி இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியாது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கட்சியின் கொள்கைக்கு முன்னுரிமை வழங்கி உறுதியான முடிவு எடுப்போம்!

## நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, ஜூலை 29

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்மானத்தை எடுக்கப் போவதில்லை. கட்சியின் கொள்கைக்கு முன்னுரிமை வழங்கி உறுதியான தீர்மானத்தை எடுப்போம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

2018 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசியலில் பெரும் சவால்களை எதிர்கொண்டோம். கோவிட் பெருந்தொற்று தாக்கத்தின்போது நாட்டு மக்களின் உயிரா ? அல்லது பொருளாதாரமா ? என்ற தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. பொருளாதாரத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம் மக்களின் உயிரை பாதுகாக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். அதற்கமைய கோவிட் பெருந்தொற்றில் இருந்து நாட்டு மக்களை பாதுகாத்தோம்.

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான பொருளாதார நெருக்கடி பெரும் அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் பெற்ற கடன்களால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்று ஒரு தரப்பினர் இன்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் பெற்றுக்கொண்ட கடன்கள் சமூக கட்டமைப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. எமது அரசாங்கத்தின் அபிவிருத்தி செயல்திட்டங்களையே தனியார் மயப்படுத்த தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் எந்த புதிய அபிவிருத்தி திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படவில்லை. மாறாக எமது அரசாங்கத்தின் அபிவிருத்தி கருத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன. ஆகவே, பொருளாதார கொள்கையில் இரு மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை இவ்வாரம் வெளியிடுவோம். நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்மானத்தை எடுக்க போவதில்லை. கட்சியின் கொள்கைக்கு முன்னுரிமை வழங்கி உறுதியான தீர்மானத்தை எடுப்போம் - என்றார். (ஐ)

## பெரமுன...

கூட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக அவருக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதேநேரம், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன கட்சி ஆதரவு வழங்காது. எனினும், அரசாங்கத்தை கொண்டு நடத்த ஆதரவு வழங்கும் என்று அந்தக் கட்சியின் உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ்...

யாழ்ப்பாணத்தில் விடுதி ஒன்றில் கூடிப்பேசியது. இதன்போது சில முக்கிய விடயங்கள் எடுக்கப்பட்டன.

இது தொடர்பில், பொதுக்கட்டமைப்பின் உறுப்பினரான நிலாந்தன் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

இதன் போது, பொதுவேட்பாளரை நிறுத்துவது குறித்தான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருக்கிறோம்.

இந்த பொதுக் கட்டமைப்புக்குக் கீழ் வரக்கூடிய உப கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. வேட்பாளர் யார் என்பதை தெரிவதற்கும், தேர்தல் அறிக்கையை தீர்மானிப்பதற்கும் கட்சி சின்னத்தை தீர்மானிப்பதற்குமான உப கட்டமைப்புகள் நிதி மற்றும் பரப்புரை நடவடிக்கைகளுக்கான உபகட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், உரிய கட்டமைப்புகளால் உரிய நேரத்தில் அந்தந்த விடயங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

## 17வயதுக்குள்...

வழங்கி பரீட்சையை இலகுபடுத்த வும் போட்டியை குறைக்கவும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளன. அத்துடன், சாதாரண தர பரீட்சைக்கான பாடங்களை 9இலிருந்து 7ஆகக் குறைக்கவும் விதந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (ஐ)

## பொலிஸ்மா...

பொலிஸ் மா அதிபர் இல்லை என்றால், அந்த அதிகாரிகளை எப்படி பெற முடியும்? தேவையான எண்ணிக்கையிலான பொலிஸ் அதிகாரிகளை இந்த வாரம் கோர வேண்டும். பின்னர் கேட்டுப் பெற முடியாது. இந்த நிலையில், தேர்தலை நடத்த முடியாது. எனவே, இது மிகவும் முக்கியமான விடயமாகும்.

எனவே, இது குறித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் ஆராய வேண்டியது உயர் நீதிமன்றத்தின் முதல் கடமையாகும். இந்த விவகாரங்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டு முடிவெடுப்பதே பாராளுமன்றத்தின் முதன்மைக் கடமையாக இருந்தது. அதை செய்யாததால்தான் பெரிய பிரச்னை ஏற்பட்டுள்ளது.

தேர்தலை ஒத்தி வைப்பதை நான் விரும்பவில்லை. செப்ரெம்பர் 21ஆம் திகதிக்கு பின்னர் வேறு நாளில் தேர்தலை நடத்த நான் தயாராக இல்லை. இந்தத் தேர்தலை எப்படியும் நடத்த வேண்டும் என்று முடிவு செய்தேன். நீங்கள் விரும்பியவருக்கு வாக்களியுங்கள். அது ஒரு பிரச்னை இல்லை. உங்களுக்கு அந்த உரிமை உள்ளது.

இனி நீதிமன்றம் செல்வதை நிறுத்திக் கொள்வோம். இப்போது நாம் தீர்வு காண வேண்டும். இந்த கண்ணி வெடியை வெடிக்கச் செய்வதா அல்லது செயலிழக்கச் செய்வதா என்பதை நாங்கள் முடிவு செய்ய வேண்டும். இதை வெடிக்க விட முடியாது. இதை பகுதிகளாக பிரித்து செயலிழக்கச் செய்ய வேண்டும். அதற்கு பாராளுமன்றமும், உயர் நீதிமன்றமும் செயல்பட வேண்டும். எனவே, சபாநாயகர் பிரதம நீதியரசரும் கலந்துரையாடி இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். இந்தப் பிரச்னையை இந்த வாரத்துக்குள் தீர்க்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## சந்தேகநபரை தாக்கிய பொலிஸாருக்கு பிணை

வடமராட்சி, ஜூலை 29

தடுப்புக் காவலிலிருந்த சந்தேகநபரை தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்ட சந்தேகநபரை தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இருவரும் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கில், தாக்கப்பட்டார் என்று குறிப்பிடப்பட்ட சந்தேகநபர், இந்த விவகாரத்தை சுமுகமாக முடிக்க விரும்புகிறார் என்றும், தான் எதிர்த்து பேசியதால் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தன்னை ஒரு முறை தாக்கினார் என்றும் குறிப்பிட்டார்.

இதையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஐ-02)

## பாய்வதற்காகவே நாம் பதுங்கி வருகின்றோம்!

### இராதகிருஷ்ணன் எம். பி.

கொழும்பு, ஜூலை 29

மலையக மக்களின் உரிமைசார் விடயங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. பாய்வதற்காகவே நாம் பதுங்கி வருகிறோம். பாயவேண்டிய நேரத்தில் மக்களுக்காக நிச்சயம் பாய்வோம் - இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நேற்று ஹற்றனில் நடந்த போராட்டத்தில் பங்கேற்கு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கோட்டாபய ராஜபக்ஷவை நீதிமன்றம் விரட்டவில்லை. மக்கள் சக்தியே விரட்டியடித்தது. எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் செயல்படாவிட்டால் மக்கள் அவருக்கு பதிலை வழங்குவார்கள். ஜனாதிபதி யாரென்பதை மக்களே தீர்மானிப்பார்கள்.

மக்கள் சக்தியே முதன்மையானது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் எனக் கூறி ஜனாதிபதி ஏமாற்றியுள்ளார். ஆளுங்கட்சி பக்கம் உள்ளவர்களும் ஏமாற்றியுள்ளனர்.

இதனை ஏற்கமுடியாது. எமது ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இப்பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காணப்படும். எமது மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும். தமிழ் முற்போக்குக் கூட்டணி பாய்வதற்காகவே பதுங்குகிறது. பாய வேண்டிய நேரத்தில் நிச்சயம் நாம் பாய்வோம் - என்றார். (ஐ)

## திரைத்துறையை சேர்ந்த தர்சனின் பெயரில் வீதி!




கொழும்பு, ஜூலை 29

இலங்கையின் திரைத்துறையில் சாதித்த தமிழரான தர்ஷன் தர்மராஜின் நினைவாக அவர் வசித்த ஒழுங்கைக்கு அவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இரத்தினபுரி - இறக்குவானையில் உள்ள வீதி ஒன்றுக்கே தர்ஷன் தர்மராஜ் மாவத்தை என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

புதிதாக பெயர் சூட்டப்பட்ட வீதியின் பெயர் பலகை நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் இணைப்பு செயலாளருமான எஸ். ஆனந்த குமார் பங்கேற்றார். அத்துடன், தர்சன் தர்மராஜின் குடும்பத்தினரும் பங்கேற்றனர். (ஐ)

# எங்களின் ஒற்றுமை இன்மையால் மண், மக்களை இழந்துவிடக்கூடாது!

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

வவுனியா, ஜூலை 29

**தமிழர்கள் பூர்வீகமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை சிதைக்கும் வகையில் தென்னிலங்கை திட்டமிட்டு பல விடயங்களை அரங்கேற்றி வருகிறது. எமது ஒற்றுமை இன்மை காரணமாக எமது மக்களையும் மண்ணையும் நாங்கள் இழந்துவிடக்கூடாது - இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.**




வெலிக்கடை சிறை படுகொலையின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்ற முன்தினம் மன்னாரிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) பணிமனையில் நடந்தது. இந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓர் இன அழிப்பின் ஆரம்ப இடம் வெலிக்கடை சிறைச்சாலை. இந்த நாட்டில் பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. தன்னை கொலை செய்வதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்டத்தில் இணைவார்கள் எனத் தலைவர் கூறிய தீர்க்கதரிசனம் 1983ஆம் ஆண்டு இளைஞர், யுவதிகள் தமது உயிரை எமது தேசத்துக்காக தியாகம் செய்துள்ளனர்.

அகிம்சை போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறி, தற்போது அது மௌனிக்கப்பட்டு, மீண்டும் அகிம்சை ரீதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது இனத்தின் பிரச்னைகளை வெளிக்கொண்டு வரும் கால கட்டத்தில் இருக்கிறோம்.

எமது மக்களின் நிலங்கள், கடல் வளம் அபகரிக்கப்படுகின்றன. தமிழர்கள் பூர்வீகமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை சிதைக்கும் வகையில் இன்றைக்கு தென்னிலங்கை திட்டமிட்டு பல விடயங்களை அரங்கேற்றி வருகிறது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைவர்களையும் போராளிகளையும் இழந்த இயக்கமாக தொடர்ச்சியாக செயல்பட்டு வந்தாலும்கூட தலைவர்களின் சிந்தனையின் அடிப்படையில் எல்லா போராளிகளையும் அரவணைத்து செல்ல வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறிய போதும் ஏனைய ஐந்து கட்சிகளுடன் போராட்ட கட்சியான ஜனநாயக போராளிகள் கட்சியையும் இணைத்து செயல்பட்டு வருகிறோம்.

எல்லா கட்சிகளும் ஒன்றிணைந்து மக்களின் விடுதலைக்காக செயல்பட்டு மக்கள் விரும்புகின்ற ஒற்றுமையை பேணி எமது மக்களுக்காக குரல் கொடுக்கும் எமது மண்ணை மீட்டெடுக்கும் தார்மீக செயல்பாட்டை முன்னெடுக்க இன்றைய நாளில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எமது ஒற்றுமையின்மை காரணமாக எமது மக்களையும் மண்ணையும் நாங்கள் இழந்துவிடக்கூடாது - என்றார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர்கள் மூவரும் சொத்து விவரத்தை வெளியிடவேண்டும்!

### ஐக்கிய நூற்றாண்டு முன்னணி

கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நூற்றாண்டு முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் அந்த முன்னணியின் பணிமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அதன் தலைவர் பிரசாத் திவிஸர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையிலும் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படுமா அல்லது கடந்த காலங்களை போன்று தேர்தல்கள் காணாமலாக்கப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் மூவரும் தங்களின் சொத்து விபரங்களை மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். அத்துடன் ஒருவரின் கருத்தை பிறிதொருவர் விமர்சித்துக் கொண்டிருக்காமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் சிறந்த கொள்கைகளை முன்வைக்கவேண்டும் - என்றார். (ஐ)

சிறுமி துஷ்பிரயோகம்:

## குற்றவாளிக்கு 13 ஆண்டு கடூழிய சிறை

கிளிநொச்சி, ஜூலை 29

15 வயது சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் தலைமறைவான குற்றவாளிக்கு 13 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்த கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் ஏற்கனவே நடந்து முடிந்த நிலையில் சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை குற்றவாளி கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் அன்றைய தினமே நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதையடுத்து, குற்றவாளிக்கு தண்டனையை நீதிமன்றம் அறிவித்தது.

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து தேசிய மக்கள் சக்தி சந்திப்பு



கல்முனை, ஜூலை 29

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கு பொறுப்பான செயல்குழு உறுப்பினர்களை மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து கலந்துரையாடினார்.

மாளிகைக்காடு வாவா றோயல் வரவேற்பு மண்டபத்தில் இந்தச் சந்திப்பு சனிக்கிழமை நடைபெற்றது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org